ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1939/35 - 2015 නොවැම්බර් මස 06 වැනි සිකුරාදා - 2015.11.06

*1939/35 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, பாரிய நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், வீரகெட்டிய பிரதேச சபைக்கு உடைமையானதும், கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டதுமான பேருந்து நிலைய மற்றும் பழைய வர்த்தக தொகுதி வளவினை 02.11.2015 இல் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இக்கட்டளை மூலம் உடைமையாக்குகின்றேன்.

பாட்டலீ சம்பிக்க ரணவக்க,
பாரிய நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
3 ஆம் மாடி, "செத்சிறிபாய",
பத்தரமுல்லை,
2015, நவெம்பர் 02.

**அட்டவணை**

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், வடக்கு கிறுவப்பத்து, வலஸ்முல்லை பிரதேச செயலகப் பிரிவில், வலஸ்முல்லை கிராமத்தில் (FVP 163) அமைந்துள்ளதும் ; 2008, மே 23 ஆந் திகதியிடப்பட்டு பதிவு செய்யப்பட்ட உத்தரவுபெற்ற நில அளவையாளர் மற்றும் நீதிமன்ற ஆணையாளருமான திரு. ரி. எச். ஜீவானந்த என்பவரால் தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இல. 2008/040 இல் காணித்துண்டு இல. 1 என காட்டப்பட்ட "கலபதிஹேன" என்றழைக்கப்படும் காணியானது, 00ஏ. 03று. 15.8பேர்ச். விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

காணியானது பின்வருமாறு சூழப்பட்டுள்ளது :

வடக்கு : நிரந்தர கட்டிடம் ;
கிழக்கு : நிரந்தர கட்டிடம் ;
தெற்கு : வீரகெட்டியாவிற்கு செல்லும் வீதி ;
மேற்கு : பெலியத்தை - மித்தெனியா வீதி.

11- 634



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.